## கழக முதன்மைச் செயலாளர் கே.என்.நேரு முன்னிலை! கழகத் துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. தலைமை!

# ஜன.26 - தி.மு.க. டெல்டா மண்டல மகளிர் அணி மாநாடு!

## கழகத் தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் சிறப்புரை! தலைமைக் கழகம் அறிவிப்பு!

**சென்னை, ஜன. 7 -**

**தேதி மாற்றத்துடன் 26.01.2026 - திங்கட்கிழமை அன்று தஞ்சாவூர் மாவட்டம், செங்கிப்பட்டியில் முதலமைச்சர் - கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சிறப்புரையாற்றிட கழக முதன்மைச் செயலாளர் கே.என்.நேரு முன்னிலையில் கழக துணைப் பொதுச்செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி., அவர்கள் தலைமையில் "வெல்லும் தமிழ்ப் பெண்கள்" தி.மு.க. டெல்டா மண்டல மகளிர் அணி மாநாடு நடைபெறுகிறது என தலைமைக் கழகம் அறிவித்துள்ளது.**

இதுகுறித்து தலைமைக் கழகம் விடுத்துள்ள அறிவிப்பு வருமாறு :-

தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் வழியில் மகளிர் மேம்பாட்டுக்கென தொடர்ச்சியான திட்டங்களை வகுத்து, 1.31 கோடி மகளிருக்கு 'கலைஞர் மகளிர் உரிமைத் தொகை', 'விடியல் கட்டணமில்லா பேருந்துப் பயணம்', கல்வி கற்கும் மாணவிகளுக்கு 'புதுமைப் பெண் திட்டம்', வேலைக்குச் செல்லும் மகளிருக்கு பாதுகாப்பான 'தோழி விடுதி', இந்தியாவிலேயே அதிக அளவாக 43 சதவீதம் வேலைக்குப் போகும் பெண்களைக் கொண்ட மாநிலமாகத் தமிழ்நாடு திகழ்வதற்கான சூழல் என மகளிர் மேம்பாட்டுக்காக தொடர்ச்சியான திட்டங்களை வகுத்து வரும் தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்கள் தலைமையில், கடந்த 29.12.2025 அன்று திருப்பூர் மாவட்டம், பல்லடத்தில், "பார் சிறுத்ததோ, படை பெருத்ததோ" என்று சொல்லத்தக்க வகையில், "வெல்லும் தமிழ்ப் பெண்கள்" தி.மு.க. மேற்கு மண்டல மகளிர் அணி மாநாடு கறுப்பு சிகப்பு மகளிர் அணி படையின் மாபெரும் எழுச்சியோடு வெற்றிகரமாக நடைபெற்றதைத் தொடர்ந்து;

முதலமைச்சர் - கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சிறப்புரையாற்றிட - கழக முதன்மைச் செயலாளர் கே.என்.நேரு அவர்கள் முன்னிலையில், கழக துணைப் பொதுச்செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி., அவர்கள் தலைமையில்;

கழகப் பொதுச்செயலாளர் துரைமுருகன், பொருளாளர் டி.ஆர்.பாலு, எம்.பி., துணைப் பொதுச்செயலாளர்கள் ஐ.பெரியசாமி, முனைவர் க.பொன்முடி, திருச்சி சிவா, எம்.பி., ஆ.இராசா, எம்.பி., அந்தியூர் ப.செல்வராஜ், எம்.பி., மு.பெ.சாமிநாதன், அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, கழக மகளிர் அணித் தலைவர் விஜயா தாயன்பன், மகளிர் அணிச் செயலாளர் திருமதி ஹெலன் டேவிட்சன், மகளிர் தொண்டர் அணிச் செயலாளர் நாமக்கல் ப.இராணி ஆகியோர் பங்கேற்பில்;

வருகிற ஜனவரி 19 அன்று நடைபெறும் என்று அறிவிக்கப்பட்ட தஞ்சாவூர் மாவட்டம், செங்கிப்பட்டியில் "வெல்லும் தமிழ்ப் பெண்கள்" தி.மு.க. டெல்டா மண்டல மகளிர் அணி மாநாடு 26.01.2026 திங்கட்கிழமை அன்று மாலை 4.00 மணி அளவில் நடைபெறும்.

மாவட்டக் கழகச் செயலாளர்/பொறுப்பாளர்களான எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், எஸ்.எஸ்.சிவசங்கர், அன்பில் மகேஸ் பொய்யாமொழி, எஸ்.ரகுபதி, சி.வி.கணேசன், பூண்டி கே.கலைவாணன், எம்.எல்.ஏ., காடுவெட்டி தியாகராஜன் எம்.எல்.ஏ., க.வைரமணி, க.அன்பழகன் எம்.எல்.ஏ., வீ.ஜெகதீசன், நிவேதா முருகன் எம்.எல்.ஏ., கே.கே.செல்லபாண்டியன், என்.கௌதமன், டி.பழனிவேல் அமைச்சர் பெருமக்களான கோவி.செழியன், சிவ.வீ.மெய்யநாதன், டி.ஆர்.பி.ராஜா - நாடாளுமன்ற உறுப்பினர்களான எஸ்.கல்யாணசுந்தரம், அருண்நேரு எம்.பி., முரசொலி எம்.பி., மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள் ஆகியோர் இம்மாநாட்டினை ஒருங்கிணைத்து ஏற்பாடு செய்வார்கள்.

நிறைவாக, தஞ்சாவூர் மத்திய மாவட்டச் செயலாளர் துரை.சந்திரசேகரன், எம்.எல்.ஏ., நன்றியுரையாற்றுகிறார்.

இவ்வாறு தலைமைக் கழகம் விடுத்துள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

---

## உலகம் உங்கள் கையில்' – கல்லூரி மாணவ, மாணவிகளுக்கு லேப்டாப் வழங்கும் திட்டம் தொடக்கம்:

# தமிழ்நாட்டின் கல்வி வளர்ச்சிக்கு அடுக்கடுக்கான திட்டங்களை 'திராவிட மாடல்' அரசு, என்றென்றும் நிறைவேற்றும்!

## சென்னை வர்த்தக மையத்தில் நடைபெற்ற விழாவில் – துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் வரவேற்புரை!

**சென்னை, ஜன. 7–**

**சென்னை வர்த்தக மையத்தில், கல்லூரி மாணவ, மாணவிகளுக்கு மடிக்கணினி (லேப்டாப்) வழங்கும் திட்டம், 'உலகம் உங்கள் கையில்' என்னும் விழாவாக, முதலமைச்சர் அவர்களால் நேற்று முன்தினம் தொடங்கி வைக்கப்பட்டது. இதில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் கலந்துகொண்டு வரவேற்புரையாற்றினார்.**

**அப்போது அவர் "10 இலட்சம் மாணவச் செல்வங்களின் எதிர்காலத்தைப் பயனுள்ள வகையில், மாற்றியமைக்கப் போகும் இந்த லேப்டாப் திட்டம் – வளர்ந்து வரும் AI உலகில் தனித்திறன்களை வளர்த்துக்கொள்ள பெருந்துணையாக அமையும். தமிழ்நாட்டின் கல்வி வளர்ச்சிக்கு அடுக்கடுக்கான திட்டங்களை அள்ளித் தரும் திராவிட மாடல் அரசு, மாணவர்கள் நலனில் என்றென்றும் அக்கறையோடு செயலாற்றும் என்பது உறுதி" என்று குறிப்பிட்டார்.**

**துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் ஆற்றிய வரவேற்புரை வருமாறு:**



கல்லூரி மாணவர்களுக்கு மடிக்கணினி வழங்குகின்ற நிகழ்ச்சி, இன்றைக்கு சிறப்பாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. தமிழ்நாட்டின் கல்வி வளர்ச்சியில், இன்று மிக மிக முக்கியமான ஒரு நாள்.

தமிழ்நாட்டு மாணவர்களைப் பொறுத்தவரை, ஒரு தாளும், ஒரு பேனாவும் இருந்தால் போதும், அவர்கள் நிச்சயமாகச் சாதித்து விடுவார்கள், உயர்ந்த நிலைக்குச் சென்று விடுவார்கள். அப்படிப்பட்ட உங்களின் கைகளில் இன்று நம்முடைய முதலமைச்சர் அவர்கள் மடிக்கணினிகளை வழங்க இருக்கின்றார்கள்.

### அறிவு இயக்கம்

திராவிட இயக்கத்தைப் பொறுத்தவரை அது எப்பொழுதுமே ஓர் அறிவு இயக்கம். அறிவியலைக் கொண்டாடுகின்ற ஓர் இயக்கம். இந்த நிகழ்ச்சிக்கு `உலகம் உங்கள் கையில்' என்ற தலைப்பை, நம்முடைய முதலமைச்சர் அவர்கள் வைத்துள்ளார்கள்.

சரியாக, 80 ஆண்டுகளுக்கு முன்பு, 1946-ஆம் ஆண்டு தந்தை பெரியார் அவர்கள் ஓர் உரையாற்றினார்கள். அந்த உரையின் பெயர் `இனி வரும் உலகம்'. அவருடைய அந்த உரையில், எதிர்காலம் எப்படியெல்லாம் இருக்கும், அறிவியல் கண்டுபிடிப்புகள் எப்படியெல்லாம் இருக்கும் என்று பெரியார் குறிப்பிடுகின்றார்.

`தூரத்திலிருந்து ஓர் உருவத்தைக் காட்டிப் பேசிக்கொள்ளும் கருவி நிச்சயம் வரும்' என்று 1946-ஆம் ஆண்டு தந்தை பெரியார் அவர்கள் சொன்னார்கள். இன்று பெரியார் சொன்னதுதான் `காணொலி அழைப்பாக' இன்று நம் முன்னால் நடந்து கொண்டிருக்கிறது. பெரியார் இன்னொரு செய்தியையும் சொல்கின்றார். `எதிர்காலத்தில் ஒரு கருவி வரும், அதைப் பயன்படுத்தி ஓரிடத்தில் இருந்துகொண்டே பல இடங்களுக்குக் கல்வி கற்றுக்கொடுக்கக்கூடிய ஒரு சூழ்நிலை வரும்' என்று பெரியார் சொன்னார்.

### தொலைநோக்குப் பார்வை

பெரியார் அன்று சொன்னதற்கு ஓர் உதாரணமாகத்தான் இன்று இந்த நிகழ்ச்சி தமிழ்நாடு முழுவதும், `காணொலிக் காட்சி' வழியாக, தமிழ்நாட்டு மாணவர்கள் அனைவரும் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். தந்தை பெரியார் அவர்கள் தொலைநோக்குப் பார்வையோடு அன்று சொன்னவையெல்லாம் இன்று அறிவியல் கண்டுபிடிப்புகளாக நம்முடைய கைகளில் இருக்கின்றன. அப்படிப்பட்ட தந்தை பெரியாரின் வழியில் வந்த முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள்தான், பள்ளிகளில் முதன்முதலில் கணினிக் கல்வியை (Computer Education) அறிமுகப்படுத்தினார்.

இந்தியாவிலேயே முதன்முறையாக 1997-ஆம் ஆண்டு, தகவல் தொழில்நுட்பக் கொள்கையை (IT Policy) அறிமுகப்படுத்தியவரும் முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள் தான். இன்றைக்கு நீங்கள் பார்த்துக்கொண்டிருக்கின்ற ஐ.டி. டைடல் பார்க் தொடங்கி, தகவல் தொழில்நுட்பத் துறையில், தமிழ்நாடு சிறப்பாக இருக்கிறது என்றால், அதற்கான வலுவான அடித்தளத்தை அமைத்தவர் டாக்டர் கலைஞர் அவர்கள். இது போன்ற முன்னெடுப்புகளால்தான் இன்றைக்கு, `கல்வி என்றால் தமிழ்நாடு, தமிழ்நாடு என்றால் கல்வி' என்று சொல்லும் ஒரு மாநிலமாக நம்முடைய தமிழ்நாடு பெயர் பெற்றிருக்கிறது.

### உயர்ந்த பொறுப்புகளில் தமிழர்

உலகெங்கும் நம்முடைய மாணவர்கள் சாதித்து வருகிறார்கள். தமிழ்நாட்டு அரசுப் பள்ளியில் படித்த பல பேர் இன்று கூகுள், மைக்ரோசாப்ட், இஸ்ரோ, நாசா என்று உயர்ந்த பொறுப்புகளில் இருந்து வருகிறார்கள். இந்த மேடை அதற்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டு. தமிழ்நாட்டில் அரசுப் பள்ளியில் படித்து, இஸ்ரோவின் இயக்குநராக உயர்ந்த மயில்சாமி அண்ணாதுரை அவர்கள், இங்கே நம் முன் சிறப்பு விருந்தினராக அமர்ந்துள்ளார்கள்.

`சந்திரயான்', `மங்கள்யான்'போன்ற பல வெற்றிகரமான திட்டங்களைச் செயல்படுத்திக் காட்டி, ஒட்டுமொத்த இந்திய மாணவர்களுக்கும் ஐயா மயில்சாமி அண்ணாதுரை அவர்கள் ஒரு உந்துசக்தியாகத் திகழ்ந்து கொண்டிருக்கிறார். இப்படி இன்று பல மயில்சாமி அண்ணாதுரைகளை உருவாக்க வேண்டும் என்றுதான் நம்முடைய முதலமைச்சர் அவர்கள் இந்த மடிக்கணினி திட்டத்தை அறிமுகப்படுத்தியிருக்கிறார்.

### வாழ்க்கையின் திருப்புமுனை

இந்த மடிக்கணினிகளை நல்லமுறையில் பயன்படுத்திக்கொள்ளுங்கள். இந்த மடிக்கணினிகள் உங்கள் வாழ்க்கையில் நிச்சயம் ஒரு திருப்புமுனையாக இருக்கும். முழுக்க முழுக்க அலசி ஆராய்ந்து, இத்துறையில் எது சிறந்தது என்று தேர்வு செய்துதான் இந்த மடிக்கணினிகளை நம்முடைய முதலமைச்சர் அவர்கள் உங்களுக்குத் தேர்வு செய்து கொடுத்துள்ளார்.

நம்முடைய திராவிட மாடல் அரசு மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கு ஏராளமான திட்டங்களைத் தொடர்ந்து செயல்படுத்தி வருகிறது. காலை உணவுத் திட்டம், தமிழ்ப் புதல்வன் திட்டம், புதுமைப்பெண் திட்டம், நான் முதல்வன் திட்டம் எனப் பல திட்டங்களைச் சொல்லிக்கொண்டே போகலாம். அந்த வரிசையில், இன்று இந்த மடிக்கணினி திட்டமும் இணைந்துள்ளது.



"உலகம் உங்கள் கையில்" நிகழ்ச்சியில் சிறப்பு விருந்தினர் இஸ்ரோ முன்னாள் இயக்குநர் மயில்சாமி அண்ணாதுரை, பொருளாதார வல்லுநர் அரவிந்த் சுப்பிரமணியன், ஐஐடி மெட்ராஸ் இயக்குநர் டாக்டர் காமகோடி, நடிகர்கள் கார்த்தி, விஜய்சேதுபதி ஆகியோர் உரையாற்றினார்கள்.

திராவிட மாடல் அரசு அமைந்த பிறகு, `நான் முதல்வன்' திட்டத்தின் மூலமாக, தமிழ்நாட்டிலிருந்து ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ். ஆகி வருபவர்களின் எண்ணிக்கை இன்று தொடர்ந்து அதிகரித்து வருகின்றது. இங்கே வந்திருக்கக்கூடிய பிரசாந்த் ஐ.ஏ.எஸ், இன்பா ஐ.பி.எஸ் போன்ற பலரை நம்முடைய அரசு உருவாக்கியுள்ளது. இவர்களைப் போல உங்களிலிருந்து பல ஐ.ஏ.எஸ், ஐ.பி.எஸ், ஐ.எஃப்.எஸ் அதிகாரிகள் உருவாக வேண்டும். அதற்கு இந்த மடிக்கணினி நிச்சயம் உங்களுக்குப் பயனுள்ளதாக இருக்கும். மைக்ரோசாப்ட், ஆப்பிள், பேஸ்புக், ஸ்பேஸ்-எக்ஸ் என உலகின் பல பெரிய நிறுவனங்கள் எல்லாம் தொடங்கப்பட்டது ஒரு மடிக்கணினியில்தான்.

### ஏராளமான வாய்ப்புகள்

ஒரு மடிக்கணினி, இணையத் தொடர்பு மற்றும் புதுமையான சிந்தனை இருந்தால், அதன் மூலம் நம்மால் எதை வேண்டுமானாலும் சாதிக்க முடியும். உலகில் ஏராளமான வாய்ப்புகள் மாணவர்களாகிய உங்களுக்காகக் கண்டிப்பாகத் திறக்கும். உங்களுடைய தாத்தா, பாட்டி காலத்தை எடுத்துக்கொள்ளுங்கள். அவர்களில் எத்தனை பேர் பள்ளிக்கூடத்துக்குச் சென்றார்கள், கல்லூரிக்குச் சென்று படித்தார்கள் என்று யோசித்துப் பாருங்கள். அப்படியே சென்றிருந்தாலும், சிலேட்டு வாங்க வசதியில்லாமல் மண்தரையில் விரலால் எழுதிப் படித்தவர்கள் நிச்சயம் உண்டு. ஆனால், இன்று தமிழ்நாட்டின் குழந்தைகள், `திறன் வகுப்பறைகளில்' படிக்கிறார்கள். உங்களுடைய கைகளுக்கு இன்று முதலமைச்சர் அவர்கள் மடிக்கணினியைக் கொடுத்திருக்கிறார். இதற்குப் பெயர்தான் வளர்ச்சி. இதற்குப் பெயர்தான் முன்னேற்றம்.

சுருக்கமாகச் சொல்ல வேண்டுமென்றால் இதற்குப் பெயர்தான் 'திராவிட மாடல்', தமிழ்நாட்டை உயர்த்திய மாடல். இந்தத் திராவிட மாடல் தொடர, மாணவர்களாகிய உங்களுடைய அன்பும் ஆதரவும் மிக மிக அவசியம். உங்களுக்காக இன்னும் ஏராளமான திட்டங்களைத் தருவதற்கு நம்முடைய முதலமைச்சர் அவர்கள் தயாராக இருக்கிறார்கள்.

### பறிக்க முடியாத சொத்து

`கல்விதான் யாராலும் திருட முடியாத, அழிக்க முடியாத, பறிக்க முடியாத சொத்து' என்று நம்முடைய முதலமைச்சர் அவர்கள் அடிக்கடி குறிப்பிட்டுப் பேசுவார். படிப்பில்லாமல் வெற்றி பெற்றவர்கள் நூறு பேர் இருக்கிறார்கள் என்றால், படிப்பால் வென்றவர்கள் நிச்சயம் லட்சம் பேர் இருப்பார்கள். மடிக்கணினி பெறுகின்ற மாணவச் செல்வங்களே, உங்களுடைய கல்வியும் அறிவும் மேன்மேலும் சிறக்கட்டும். மடிக்கணினி பெறுகின்ற அனைத்து மாணவர்களுக்கும் எங்களுடைய வாழ்த்துகளை நாங்கள் தெரிவித்துக் கொள்கிறோம்.

இந்தச் சிறப்புக்குரிய விழாவுக்குத் தலைமையேற்றுள்ள நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை இந்த நிகழ்ச்சிக்கு வருக வருக என வரவேற்கிறேன். மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், மாண்புமிகு நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், தலைமைச் செயலாளர் முருகானந்தம் ஐ.ஏ.எஸ் அவர்கள் உட்பட அனைத்து அரசு அதிகாரிகள் அனைவரையும் வருக வருக என வரவேற்கிறேன்.

விழாவின் சிறப்பு விருந்தினர் இஸ்ரோவின் முன்னாள் இயக்குநர் ஐயா மயில்சாமி அண்ணாதுரை அவர்களையும் அன்போடு வருக வருக என வரவேற்கின்றேன்.

**I welcome renowned economist Thiru. Arvind Subramaniam Avargal. I welcome Mr. Thomas Dose, the Managing Director of BMW Group Plant Chennai.**

கிஸ்ப்ளோ நிறுவனத்தின் நிறுவனர் சுரேஷ் சம்பந்தம் அவர்களையும், திரைக் கலைஞர் சகோதரர் கார்த்தி உள்ளிட்ட அனைத்துத் திரைக்கலைஞர்களையும், விளையாட்டுத் துறை சாதனையாளர்கள் விஸ்வநாதன் ஆனந்த் அவர்களையும், பிரக்ஞானந்தா, தங்கை வைஷாலி, தங்கை ஜோஷ்னா சின்னப்பா, தங்கை கார்த்திகா மற்றும் தங்கை கீர்த்தனாவையும், பல்வேறு துறைகளைச் சேர்ந்த வல்லுநர்கள், ஆராய்ச்சியாளர்கள், பொருளாதார அறிஞர்கள், கல்லூரியின் முதல்வர்கள், பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள் அனைவரையும், தம்பி லிடியன் நாதஸ்வரம் உள்ளிட்ட அனைத்துக் கலைக் குழுவைச் சேர்ந்தவர்களையும், இந்த நிகழ்ச்சியை இவ்வளவு சிறப்பாக ஏற்பாடு செய்துள்ள அரசு அதிகாரிகள், அலுவலர்கள், தன்னார்வலர்களையும், தங்களுடைய பிள்ளைகளுடைய எதிர்காலம் குறித்த நம்பிக்கைகளைச் சுமந்திருக்கின்ற பெற்றோர்களையும், பத்திரிகை மற்றும் ஊடக நண்பர்களையும் வரவேற்று மகிழ்கின்றேன்.

இறுதியாக, என்னுடைய அன்பிற்குரிய மாணவச் செல்வங்களே, உங்களை இந்த நிகழ்ச்சிக்கு வரவேற்பதைக் காட்டிலும், ஒரு நம்பிக்கைக்குரிய எதிர்காலத்திற்கு உங்கள் அனைவரையும் வருக வருக என்று வரவேற்று, வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன்.

இவ்வாறு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் வரவேற்புரையாற்றினார்